[29th April 1959

SRI P. G. MANICKAM : இங்கு வைக்கப்பட்டிருக்கிற ஸ்டேட்மெண்டில் ஆறு மாத செலவினங்களைப் பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. மீதி ஆறு மாத செலவினங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இப்போது மார்ச் மாதம் முடிவடைந்துவிட்டது. இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை எல்லாம் ஏன் செலவு செய்யப்படவில்லை ? ஆகவே, இந்த வருஷம் செலவு செய்யப்படாத தொகையை எல்லாம் அடுத்த வருட பட்ஜெட்டில் சேர்த்து செலவு செய்வதற்கு சர்க்கார் உத்திரவிடுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த வருடத்தில் செலவு செய்யவில்லை என்றாலும் அடுத்த வருடத்தில் சேர்த்து செலவு செய்யப் படும். செலவு செய்யப்பட வேண்டும் என்பதற்காக வீணாகச் செலவு செய்துவிட முடியாது.

Police Out-post at Sembiakudi, Kulamanickam

*250 Q.—SRI T. K. SUBBIAH : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் தாலுக்கா செம்பியக்குடி குலமாணிக்கத் தில் ஒரு அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன் திறக்க வேண்டுமென்று மகஜர் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI K. PERIANNAN : ஸார், எந்த அடிப்படையில் போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்திருக் கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்தெந்த இடங்களில் அவசியம் இருக்கின்றதோ அந்த இடங்களில் எல்லாம் ஏற்படுத்து வது என்பது அரசாங்கத்தின் தீர்மானம். இதில் குறிப்பிட்டிருக்கிற இடத் தில் இப்போது போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென்று அரசாங்கம் கருதியதால் அரசாங்கம் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

Iron ore deposits in Thazhangulam village

*251 Q.—SRI V. SANKARAN (on behalf of SRI K. GOPALA KOUNDER) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலுக்கா, தாழங்குளம் கிராமத்தில் இரும்பு கனிப் பொருள்கள் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஆ) தெரிந்திருந்தால் அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நட வடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The detailed report of the investigation has not been received by the Government. Necessary action will be taken after the report is received and studied.